மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

T. S. பாண்டியன்
எண். 34, H. பிளாக் ஜீவானந்தம் சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

நெடுவின் 'ஒருபெரும்' உடுவம் எத்தனை நாளைக்கு காங்கிரசை காத்திடும்!

நாவலர் எழுப்பும் வினா !

1-6-59-ம் தேதி சென்னை 76-வது வட்டம், கலைவாணர் என். எஸ். கே. நினைவு மன்றத்தின் ஆதரவில், சென்னை நகர மேயருக்கும் திருவல்லிக்கேணி வட்ட, தி. மு. கழக நகரமன்ற உறுப்பினர்கட்கும் மகத்தான வரவேற்பும், பாராட்டு விழாவும் நடைபெற்றது. திரு. பெருமாள் தலைமை தாங்கினார். 58வது வட்ட நகரமன்ற உறுப்பினர் திரு. சிட்டிபாபு, மேயர் அரசு ஆகியோர் பேசிய பின் தி. மு. கழக பொதுச்செயலாளர் நாவலர். இரா. நெடுஞ்செழியன் பேசினார். அதன் விவரம் கீழே தரப்பட்டிருக்கிறது.

அவைத் தலைவர் அவர்களே! சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர் அவர்களே! மற்றுமுள்ள பெரியோர்களே! அன்பு கெழுமிய தோழர்களே! பாட்டாளி நண்பர்களே! தொழிலாளத் தோழர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த மகிழ்ச்சியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

மாநகராட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ள நம்மவரும்—நல்லவரும், ஆட்சி புரிவதிலே வல்லவரும் ஆன, நகரத்தந்தை திரு. அ.பொ. அரசு அவர்களையும், மற்றும் திருவல்லிக்கேணி தொகுதியில் வெற்றி பெற்ற கழக நகரமன்ற உறுப்பினர்களையும் பாராட்டவும்—நல்ல முறையில் பாடுபட வைக்கவும் 76 வது வட்ட கலைவாணர் என். எஸ். கே, நினைவு மன்றத்தினர், இத்தகைய மாபெரும் கூட்டத்தைக் கூட்டி சீரும் சிறப்புமான வரவேற்பளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

கடந்த ஒரு திங்களாகவே, சென்னை மாநகர் எங்கும், பல்வேறு கிளைக் கழகங்களும், படிப்பகங்களும், துணைமன்றங்களும், பொது மக்களும் மாநகர் ஆட்சிப் பொறுப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களிடம் கிடைத்திருப்பது குறித்து பெருமகிழ்ச்சியும், பெருமையும், பெருமிதமுங் கொண்டு, பாராட்டு விழாக்களைக் கொண்டாடிய வண்ணம் இருப்பதைப் பார்க்கிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்துள்ள இந்த வெற்றியைக் கண்டு சிலருக்கு கேள்விக் குறியும், வேறுசிலருக்கு சந்தேக குறியும் ஏற்படுகின்றது! பலருக்கோ, இந்த வெற்றி மகிழ்ச்சிக் குறியாக இருக்கின்றது! மற்றும் சிலருக்கு எந்தக் குறி போட்டுப் பார்ப்பது என்பதும் தெரியாது. திகைத்தபடி உள்ளனர்!

எது எப்படியென்றாலும் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியும், அது இன்று பெற்றுள்ள வெற்றி குறித்தும் நாடெங்கும் வாதாடவும், வாதங்களை வகை, வகையாக அலசிப் பார்ப்பதும்—விளக்கிடுவதுமான அருமையான நிலைமை—கவனிப்பு ஏற்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்!

சென்னை நகர மன்ற தேர்தலில் 90 இடங்களுக்குப் போட்டியிட்டு, 45 இடங்களில் கழகத் தோழர்கள் வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பிலும் வீற்றிருக்கின்றனர், 18 பேர் வெற்றிக்கான வாய்ப்பை. பல்வேறு காரணங்களால் இழந்துள்ளனர். போட்டியிடாத பத்து இடங்களையும் சேர்த்து இன்றும்

(6-ம் பக்கம் பார்க்கவும்)

காஞ்சியைக் காட்டி கேலி செய்யும் காங்கிரசே !
விருதுநகரின் வீழ்ச்சியைக் கண்டும்வீறுப்பு ஏன்?

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போடாத. கிராமப்பட்டாமணியம் முதல் சூட்டு-கோட்டு, 'டை' கட்டி தலைப்பாகை அணிந்து தானே தீரவேண்டியிருந்தது!

கலெக்டருக்கே, இந்த வழக்கம்! அவருக்கும் மேற்பட்ட கவர்னர்-வைஸ்ராய், இலண்டனில் இருந்த இந்திய மந்திரி முதலியவர்களைப் பார்க்க வேண்டுமென்றால் எவ்வளவோ சம்பிரதாயங்கள் இருந்தனவே!

இவர்கள் எல்லோருக்கும் அதிபதியான-இந்தியா சக்கரவர்த்தியைப் பார்க்க, "சம்பிரதாய உடைகளை அணிய மாட்டேன்! அரை நிர்வாண கோலத்தில் அணிந்துள்ள உடையோடு தான் செல்வேன்! இன்றேல் சக்கரவர்த்தியைச் சந்திக்க மாட்டேன்!" என்று, காந்தியார்சொன்னார்-சொன்னபடியே சென்றார்- சாதித்தும் காட்டினார்.

காந்தியார், சம்பிரதாயத்தை உடைத்து விட்டாரே! மறுத்து விட்டாரே என்று அன்று கூறினீர்களா! அது அவமானம் என்று எழுதினீர்களா இல்லையே!

"காந்தியார் விட்டுக் கொடுத்தரா? வெள்ளையனுக்கு அடி பணிந்தாரா! இல்லை" என்று பாராட்டி, பெருமிதம் அடையவில்லையா! அந்த 'புத்தி, இப்போது, எங்கே போயிற்று! மேயர் 'அரசு' மக்கள் எண்ணப்படி, வானொலியில் பேச மறுத்ததையும் அன்று போல பாராட்டும்' புத்தி வேண்டாமா இப்போது! அது தான் இல்லையென்றாலும், தூற்றாமல் இருக்கும் தன்மை கூடக் காணோமே!

வரலாற்றை எண்ணிப் பார்க்கும் எவரும், அரசு, முறை கெட்ட முறையில் சம்பிரதாயத்தை உடைத்து விட்டார் என்றோ, வழக்கைத்தை உதறித் தள்ளிவிட்டார் என்றோ ஒரு சிறிது குறையும் சொல்ல முடியாது!

சம்பிரதாயம்—வழக்கம் என்பது என்ன? எப்படி ஏற்படுகிறது? பொதுக்கூட்டம் நடத்துகிறோம், இன்று. இதற்கு ஒருவர் தலைவரை முன்மொழிய, அதனை மற்றொருவர் வழிமொழிய, அதன் பின்னர், தலைவர் அமர்ந்து, பேசி, அடுத்து நெடுஞ்செழியன் பேசுவார்', என்று தெரிவித்த பிறகு, நான் உங்களிடையே பேசுகிறேன். இதுவும் ஒரு சம்பிரதாயம் — வழக்கந்தான்!

இவைகளை யெல்லாம் விட்டு, நானே எழுந்து நின்று 'நான் தான் நெடுஞ்செழியன்—பேசுகிறேன் என்று நானே கூறிக் கொண்டும் பேசலாம்—நீங்களும் கேட்கலாம்! அப்படியா, செய்கிறோம்! இல்லையே!

முறை கெட்டு எந்தச் சம்பிரதாயங்களையும் — வழக்கங்களையும் உடைக்கும் எண்ணம்நமக்கு இல்லவே இல்லை! வழியற்ற வழியில் வழக்கத்தை விட்டொழிப்பவர்கள் அல்ல, நாம்! நமது அரசுவும் அப்படித்தான்!

ஆகாஷ்வாணியை தமிழர்கள் விரும்பவில்லை, எதிர்க்கிறார்கள்! அதை அகற்று! மீண்டும் 'வானொலி, என்ற தூய தமிழ்ச் சொல்லே, ஒலிக்கட்டும் என்ற தமிழ் மக்களது உணர்ச்சியை—எழுச்சியை, உணர்த்தும் கண்ணியமான செயல்தான். மேயர் அரசு, பேச மறுத்தது வேறென்ன! என்று நேர்மையாளர்களைக் கேட்கிறேன்!

வெள்ளுடை வேந்தன் — சர். பிட்டி. தியாகராயர், கவர்னரைக் காண, அதற்கான சம்பிரதாய உடையணிந்து செல்ல மறுத்தார். பின்னர், அவர் எப்போதும்அணியும் வெள்ளுடை' அணிந்தே சென்று கவர்னரைக் காணும் வாய்ப்பு பெற்றார். அத்தகைய வீரரது வழிவந்த நமது அரசும், மற்ற கழக உறுப்பினர்களும், நகர மன்றத்துள் நுழையு முன், தியாகராயரது சிலைக்கு வீரவணக்கம் செலுத்தினர்! அத்தகையோர் தமிழரது உணர்ச்சியை எப்படி மறக்க முடியும் என்று கேட்கிறேன்.

இதையெல்லாம் கண்டவர்களுக்கு, நமது கழகத்தின் வெற்றியைப் பார்த்தவர்களுக்கு, மக்கள் மன்றம் கொண்டுள்ள மகிழ்ச்சியை உற்று, உணர்ந்துள்ளவர்களுக்கு உடம்பெல்லாம் எரிச்சல் ஏற்பட்டுள்ளது. எனவேதான் இத்தகைய தூற்றல்கள் என்றும் உணரவேண்டுகிறேன்!

'ஆகாஷ்வாணி' பிடிக்காத நீங்கள், 'மேயர்' என்பதை மட்டும் எப்படி ஏற்கலாம்! அந்நிய சொல்லைக் கையாளலாம் என்றும் சிலர் பேசுகிறார்களாம்—கேட்கிறார்களாம்!

நாம், 'மேயர்' என்று பெரும்பாலும் பேசுவதில்லை; கையாளுவதும் மிகமிகக் குறைவுதான்! நகரத் தந்தை, மாநகராட்சி மன்றத் தலைவர், மாநகரின் முதற் குடிமகன் என்றுதான் நாம் பொதுவில் பேசுகிறோம்—கையாண்டும் வருகிறோம்! என்றாலும், 'மேயர்', என்று வழங்கினாலும், அதிலே தப்பு இல்லை. 'மேயர்' என்ற ஆங்கிலச் சொல்லும், தமிழ் வழக்கிற்கு ஏற்றபடி, தமிழ்ச் சொல்லாகவும் அமைந்துதான் உள்ளது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

'மே', என்றால் தமிழில், உயர்வைக் குறிக்கும். 'மே', என்ற பகுதியுடன் 'அர்,, என்ற விகுதியைச் சேர்த்தால் 'மேயர் என்றாகிறது. இதையே மே + ஐ + அர் என்றும் பிரிக்கலாம்.

'ஐ' என்பது தந்தை, அய்யா என்று மூத்தோரையும, உயர்ந்தோரையும் குறிப்பிடுவதாகும்! வாருங்கள் 'ஐயா' என்கிறோம்! தந்தையை 'ஐயா' என்று அழைக்கிறோம்! அது போல ஐ + அர் என்றால் ஐயர் ஆகி, உயர்ந்தவர் என்ற குறிக்கின்றது (ஐயர் என்று ஜாதிச்சொல் தமிழில் இல்லை]

சங்க இலக்கியமான புறநானூற்றில், 'மே' என்றசொல் 'சிறந்த—சீரிய—உயர்ந்த' என்ற கருத்தில் கையாளப்பட்டுள்ளது 'அர்', விகுதி தமிழில் உயர்வைக் குறிக்கப் பயன்படுத்துவது கண் கூடாகும், கிருட்டினன் என்பது 'கிருட்டினனார்', நக்கீரன் என்பது 'நக்கீரனார்', என்றாகும் போது உயர்ந்தவர் என்று குறிப்பிடவே கையாளப்படுவதைக் பார்க்கலாம்!

எனவே, மே + ஐ + அர் சேர்ந்து 'மேயர்' என்றுவதால், 'மேயர்' தூய தமிழ்ச் சொல்லாகிறது. இதனை ஆங்கிலச் சொல்லாக எண்ணாது, தமிழ்ப்பகுதி-விகுதி பிரித்துப் பார்த்தால் தமிழே ஆகிறதே!

எனவே, 'மேயர்', என்ற சொல் நமக்கு ஒத்தே வருகிறது! இசைந்தே அமைந்துள்ளது. இயற்கையோடு இணைந்து — உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் மற்றொன்றும் வைக்காது—கள்ளங் கபடமின்றி—வாழ்பவர்கள் நாம்! எனவே, 'மேயர்' என்ற ஆங்கிலச் சொல்லும், இயற்கையாக, தமிழுடன் ஒட்டி, நமக்கு ஏற்றதாக உள்ளது என்றும் விளக்க விரும்புகிறேன்.

மாற்றார் நம்மைப்பற்றி எத்தகைய கேலி—கிண்டல் பேசினாலும் கவலை இல்லை நமக்கு! நாம் பட்ட பாட்டிற்கு பலன் கிடைத்தே வருகின்றது! உழைப்புக்கு உருவான பலன் உண்டு. இதை உணர்ந்து மேலும் உணர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் பாடுபட்டு வரவேண்டும். இதில்தான் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்!

1949-ம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தை, நாம் துவக்கியநேரத்தில், கண்ணீரும் கம்பலையுமாக ஒரு சிலராகத் தான் நாம் இருந்தோம்! இந்தச் சிலர் என்ன செய்துவிடப்போகிறார்கள் என்றுதான் அன்றும் ஏசினார்கள்! தூற்றிப் பேசினார்கள்!

பிறர் ஏசலையும், தூற்றுதலையும் கவனியாது நாம் பாடுபட்டோம். அன்று முதல் இன்று வரை நாம் வளர்ந்தோம்—வளர்ந்துகொண்டேதான் இருக்கின்றோம்!

நமது வளர்ச்சி—நமது பலம் - நமக்கு மக்களிடம் ஏற்பட்டுள்ள ஆதரவு அத்தனையையும் சீர் தூக்கிப்பார்த்து படிப்படியாக. நாம் நாட்டு நிர்வாகத்தினைப் பெற—விடுதலைக்கான வழிவகைகளை அமைத்திட முனைந்து வருகிறோம்.

1949-ல் தொடங்கி, கழகம் 1956-ல் தான் முதன் முதலாக கட்சியின் பேரால், தேர்தலில் போட்டியிட்டது. கழகத்தவர் கழகச் சார்பில்தேர்தலில் கலந்து சொண்டனர். 122 இடங்களில் போட்டியிடும் 'துணிவு' ஏற்பட்டது, பெற்றது 15 தான் என்றாலும் நாம் துவண்டு விடவில்லை.

1959-ம் ஆண்டுக்கு முன் சென்னை நகர சபையில் தி. மு. கழகத்தின் சார்பா ஒருவரும் இல்லை! கட்சித் தோழர்களான அரசு; முனுசாமி இருவரும், தனிப்பட்ட முறையில்தான் உறுப்பினராகி யிருந்தனர். ஆனால் இன்று கழகம் 90 இடங்களில் போட்டியிட்டு, 45 இடங்களைப் பெற்று, 'மேயர்' பதவி வகித்து, நகர மன்ற ஆட்சிப் பொறுப்பையும் ஏற்று நடத்தி வரும் நிலைமைக்கு ஏற்பட்டிருக்கின்றது!

பத்தாண்டு காலத்திற்குமுன்—ஏன்?கடந்த ஆண்டில் இருந்த நிலைமையை நோக்கிடும்போது, தி. மு. கழகத்திற்கு சென்னை 'வெற்றி', மகத்தான வெற்றி தான்! பெரிதும் மகிழ்ந்திட வேண்டிய வெற்றி என்பதிலும் சந்தேகமில்லை.

சென்னையில் மகத்தான வெற்றி பெற்று விட்டோம்! இதோடு நமது வேலை முடியவில்லை.பெறவேண்டியதை,பெற்றால் வேண்டிய வெற்றிகள் இன்னும் ஏராளம்! அதற்காகப் படவேண்டியபாடு, ஆற்றவேண்டிய உழைப்பு ஏராளம் உண்டு!

பெற்றது குறைவு! பெற வேண்டியது ஏராளம்! நாம் வளர்ச்சியடைகிறோம்-வளர்ந்து வருகிறோம்,வளர்ச்சி பூரணமாகி விடவில்லை என்பதை உணர வேண்டுகிறேன்! நாம் வளர—நமது கழகம் மேலோங்க-கழகக் கொள்கைகளுக்கு மக்களது ஆதரவு பெருகிவருகிறது, இதை மேலும் பெருக்கி, நமது இலட்சியம்—திராவிட நாடு, திராவிடருக்கே என்றஇலட்சியம் ஈடேற வழிவகைக்கண்டாக வேண்டும்!

நாம் பெற்றுள்ள, இந்த 'அளவு', வெற்றிக்கே, காங்கிரசார் அஞ்சி, நடுங்கிச் சாகின்றனர்! நமக்கு மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை என்றும், காங்கிரசின் செல்வாக்கு சீரழிந்து போகவில்லை. என்றும் படாத பாடுபட்டுப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு.கே. ராஜாராம் நாயுடு அறிக்கை விடுகிறார், காங்கிரஸ் நகரசபைத் தேர்தல்களில் செல்வாக்கை இழக்கவில்லை, என்று! ஏற்கனவே இருந்ததைவிட அதிகம்தான் பெற்றுள்ளது. இடங்கள் குறையவில்லை என்று புள்ளி விபரம் தேடியலைகிறார்.

இதே நேரத்தில், முதலமைச்சர் காமராஜர், காங்கிரசின் தோல்விக்கு கண்டுப்பிடித்திருக்கும் காரணம் மிகவும் விசித்திரமானது, வேடிக்கையானது-காங்கிரசாருக்கே வேதனையும் தருவதாக உள்ளது.

சென்னையில், காங்கிரஸ் சார்பில் 'சரியான',ஆட்களை நிறுத்தவில்லை. எனவேதான் காங்கிரஸ் அதிக இடங்களைப் பெறவில்லை. தி. மு. கழக வெற்றிக்கு இது தான் காரணமேதவிர, அதனுடைய செல்வாக்கினால் அல்ல! இது காமராஜர் கூறும் காரணமாகும்!

'சரியான' ஆட்களை நிறுத்தாமல் தடுத்தது எது! கண்ணிருந்தும், அறிவு இருந்தும் ஏன் 'சரியான' வர்களைநிறுத்தவில்லை.யார் தடுத்தது? அறிஞர் அண்ணாவா? இல்லையே ஒருவேளை,'நல்ல-சரியான' ஆட்கள் தேர்தல் முடிந்த பிறகு தான் 'கிடைத்தார்கள்'போலும்!

காங்கிரஸ் சார்பில் நின்று தோற்றவன் அழுகிறான் — பணத்தை வேறு பல ஆயிரக் கணக்கில் செலவழித்து வேதனைப்படுகிறான். இந்த நிலையில்,

(8-ம் பக்கம் பார்க்கவும்)

தி.மு.க. ஏழையர்கள் கட்சி! ஒருபோதும் ஏழைகளுக்கு வரி விதிக்காது !

முத்தையாசெட்டிக்குவரி விதித்தால் முனியனுக்கென்ன கவலை?

வசதியுள்ளவர்களிடம் வாங்குவோம் !

வாழ்வற்றவர்களுக்கு வசதி செய்து கொடுப்போம் !

வரி போட்டு நம்மைத் திணறவைக்கும் ஆளும் கட்சிக்கு

அண்ணா விடும் சவால்!

மேயருக்கும், துணை மேயருக்கும், நகரசபை உறுப்பினர் ராமதாசுக்கும் 28-5-59 அன்று மூர்மார்கெட் வியாபாரிகள் தங்களது பாராட்டுதலைத்தெரிவிப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவு

தலைவரவர்களுக்கும், மேயர், துணைமேயர் அவர்களுக்கும்என்னுடைய உளங்கனிந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, இந்த பாராட்டுக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பினைஏற்படுத்தித்தந்த மூர்மார்க்கெட் வியாபாரிகளுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர சபைத் தேர்தலுக்கு நின்ற தோழர்கள் உங்களது ஆதரவைக் கொடுக்குமாறு உங்களை நாடினார்கள். நீங்களும் அவர்களுக்கு உங்களது நல்லாதரவைத் தந்தீர்கள். உங்களது ஆதரவைப்பெற்றுவெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்ற தோழர்கள் தங்களது பொறுப்பினை உணர்ந்து அவர்கள் பொறுப்பை செவ்வனே செய்து முடிப்பதற்கு இப்படி நித்தம் நித்தம் நடத்தப்படும் பாராட்டு கூட்டங்கள் நல்ல நம்பிக்கையை ஏற்படுத்து மென்பதில் ஐயமில்லை.

இப்படித் தொடர்ந்து பாராட்டுக் கூட்டங்கள் நடை பெறுவதனால்தான் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு ஏற்படும் மனவேதனையின் காரணமாக தங்கள் வாயில் வந்தபடி ஏதேதோ சொல்லி வருகிறார்கள்.

தொண்டை கம்மிப் போன பாகவதர் ஒருவர் நன்றாகப் பாடும் இளம் சங்கீத வித்வானைப் பார்த்து பாட்டு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் தாளம் சரியில்லை என்று சொல்லுவார்;

வயதான காரணத்தினால் நடிக்க முடியாது ஓய்வு பெற்ற நடிகர் ஒருவர், நன்றாக நடிக்கும் இளம் நடிகரைப் பார்த்து இந்த நடிகன் கண்ணை உருட்டி உருட்டி பார்க்கிறானே யொழிய அவனது நடிப்பு ஒன்றும் போற்றக் தக்கதாயில்லை என்று தான் கூறுவான்!

நன்றாக வியாபாரம் நடைபெறும்ஒரு கடையின் சொந்தக்காரரைப் பார்த்து அவன் ஆளை மயக்குவதில் கெட்டிக்காரன்— அதனால் தான் அவனுக்கு நல்ல வியாபாரம் நடக்கிறது என்று சொல்வான்.

இது போலத்தான் தினம் தினம் நமக்கு நடக்கும் பாராட்டுக் கூட்டங்களையும், மக்களிடமிருந்து கிடைக்கும் பேராதரவையும் கண்டு காங்கிரஸ்காரர்கள் நம்மைப்பற்றித் தாறுமாறாகப் பேசுகிறார்கள்,

திருமண வீடுகளுக்குச்செல்லும் விருந்தினர் மணமக்களைப் பார்த்து—பெண் என்னமோ அழகாகத்தானிருக்கிறாள். ஆனால் பிள்ளை தான் அவளுக்கு ஏற்றவனில்லை என்று சொல்வார்கள். அது போல நமது மேயர் அரசு அவர்களும் மணப்பந்தலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இவரைப் பார்க்கும் காங்கிரஸ்காரர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? மேயர் பதவி என்னமோ நல்ல பதவி தான். ஆனால் இவர்கள் தான் அந்தப் பதவிக்கு ஏற்றவர்களல்ல என்று சொல்கிறார்கள். அவர்கள் இப்படி யெல்லாம் பேசப் பேசத்தான் நாமும் பல அரசியல் ரகசியங்களை வெளியிட வேண்டிய சங்கடமான நிலையில் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறோம்.

மேயர், பதவிக்கு வந்தவுடன் அவர் ரேடியோவில் பேசுவது நெடுங்காலமாக இருந்து வரும் வழக்கம். பதவியேற்றவுடன் மேயர் ரேடியோவில் பேசுகின்ற ஒரு வழக்கம் ஏன் இருந்து வந்த தென்றால், பதவியேற்ற மேயர் தன்னிடம் மக்கள் இன்னின்ன காரியங்களைதான் செய்யக் கூடுமென்று எதிர்பார்ப்பார்களென்றும், தான் தனது பதவி காலத்தில் இன்னின்ன காரியங்களைச் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் மக்களுக்கு அறிவிப்பதற்காகத் தான்.

இந்தப் பழக்கம் எந்தக் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால மக்களை நேரில் பார்த்து நகரத்திற்கு இன்னின்ன பணிகளை, தொண்டுகளைச் செய்யப் போகிறேன்'' என்று சொல்லாத நிலையில் உள்ளவர்கள் மேயராக வந்தகாலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்,

அரசுவிற்கு முன் இருந்த மேயர்கள் ரேடியோவில் பேசி வந்தார்களென்றால் அவர்களெல்லாம் மக்களைப்பார்க்காதவர்கள், அந்த காரணத்தினால் தான் மக்களை ரேடியோவின் மூலம் சந்தித்தார்கள். ரேடியோவில் மேயர் பேசுகிறார் என்றால் எல்லோரும் அதைக் கேட்கிறார்களோ இல்லையோ அவர் பேசுவதைப் பேசி விடுவார், இது எப்படி இருக்கிறது என்றால் நாடகத்தில் கூட்டம் இல்லாவிட்டால் நாடகம் நடைபெறாது ஆனால் சினிமாவில் கூட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சினிமா ஓடிக் கொண்டிருப்பதைப் போல உள்ளது.

தி. மு. கழகத்தின் சார்பில் நின்று பதவி யேற்றவர்கள்ரேடியோவில் பேசத் தேவையில்லை. காரணம் அவர்கள் மக்களை நேரிலேயே நித்தம் நித்தம் சந்திக்கிறார்கள், இந்த காரணத்தினால் தான் நமது அரசுவும் ரேடியோவில் பேச மறுத்து விட்டார்.

நான் ரேடியோவில் பேச ஐந்து ஆண்டு காலத்திற்கு முன்பே மறுத்திருக்கிறேன். ஐந்துஆண்டுகளுக்கு முன் திருச்சி வானொலி நிலையத்தில் ''பொது மக்களிடத்தில் அரசியல் தொடர்பு'' என்ற தலைப்பில் பேச்சுக்கலை என்றவிஷயத்தைப் பற்றிப் பேசினேன். மறுபடியும் திருச்சி வானொலி அதிகாரி ஒருவர் எனக்கு கடித மெழுதியிருந்தார். நான் அதற்குபதில் எழுதியிருந்த கடிதத்தில் இந்தத்தடவை பேச்சுக் கலை என்ற விஷயத்தைப் பேசுவதற்கு பதிலாக ''கண்காட்சி'' என்ற விஷயத்தைப் பற்றிப் பேசுவதாக குறிப்பிட்டிருந்தேன்.

கண் காட்சி மக்களுக்குப் பயன் தருவதற்காக ஏற்படுத்தப்படுகிறதா? அல்லது கடைத்தெருக்களிலே மலிவான விலைக்கும் விற்பனையாகாமல் இருக்கின்ற பொருள்களை நல்ல விலைக்கு விற்கப் பயன்படும் சாதனமாக உள்ளதா? என்று பேச விரும்பினேன். ''கண்காட்சி'' என்ற விஷயத்தைப்பற்றிப்பேசத்தேவையில்லையென்றும் ''பேச்சுக்கலை'' என்ற விஷயத்தைப் பற்றித் தான் பேசவேண்டுமென்றும்வானொலி நிலைய அதிகாரியிடமிருந்து கடிதம் வந்தது, நான் இதற்கு மறுத்து விட்டேன். இதற்கு நான் பதில் எழுதிய கடிதத்தில் ''ரேடியோவில் எப்படியாவது

மேயருககு திருச்சி மக்கள் அளித்த பெரும் வரவேற்பைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் வெட்கப்பட்டிருக்க வேண்டும் !

பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால் போதும் என்று இருந்தால் நான் உங்களது அழைப்பை ஏற்றுக் கொண்டிருப்பேன். இப்போது அந்த நிலையில் நான் இல்லை. அந்த நிலை போய் விட்டது, ஆகையால் உங்கள் அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கில்லை''—என்று குறிப்பிட்டிருந்தேன்,

அன்று முதல் இன்று வரை ரேடியோவில் பேசுமாறு எனக்கு எத்தனையோ அழைப்பு வந்தது. ஆனால் அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஒரு தடவை கூட நான் ரேடியோவில் பேசவில்லை. நான் அன்று முதல் இன்றுவரை இந்தச்சம்பவத்தைப் பற்றி ஒருவரிடமும் சொல்லவில்லை, இதை ஏன் இன்று சொன்னேன். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நம்மைத் தாறுமாறாகப்பேசுவதால் வெளியிடாத அரசியல் ரகசியங்களை எல்லாம் வெளியே சொல்ல வேண்டிய நிலைமைக்குகொண்டு வந்து நிறுத்தப்படுகின்றேன்.

சமீபத்தில் அன்பழகனின் துணைவியார் கூட ரேடியோவில் பேச மறுத்து விட்டார்கள். ரேடியோவில் யாராவது பேச மறுத்தால் அதைப்பற்றிபுலவர்களோ அல்லது சங்கீத வித்வான்களோ தங்களது கவலையைத் தெரிவிப்பதில் அர்த்தமிருக்கிறது. ரேடியோ இலாகாவை நிர்வாகித்து வரும் மத்திய சர்க்கார் அல்லவா இதைப் பற்றி வருத்தப்பட வேண்டும். இந்தவிஷயத்தைப் பற்றி தினப்பத்திரிகைகளுக்கு கஷ்டமென்ன, நஷ்டமென்ன என்று கேட்கிறேன். மேயர் அரசு பதவி யேற்றவுடன் ரேடியோவில் பேசுவதில்லை என்பதைப் பற்றி பத்திரிகைகள் விமர்சனம் செய்ய வேண்டிய அவசியமென்ன?

அரசு ஒரு பத்து நிமிஷ நேரம் ரேடியோவில் பேசி விட்டால் போதுமா? மேயர் தான் நித்த நித்தம் மக்களைச் சந்திக்கிறார். நித்த நித்தம் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இன்னும் வீதிக்கு வீதி பாராட்டு விழாக்கள் நடைபெறுகின்றன. ஏன்? இன்றும். அனுமதிகொடுத்தால் வீட்டுக்கு வீடு பாராட்டு விழாக்கள் நடந்தாலும் நடக்கும் அப்படியிருக்கையில் மேயர் ரேடியோவில் பேசித்தான் ஆகவேண்டுமென்று இல்லை. ரேடியோவில் பேசுவதைவிட மேயர் மக்களை நேரிலேயே சந்தித்து நகர சபை நாட்டு மக்களுக்கு ஆற்ற விரும்பும் பணிகளைத்திறம்பட ஆதார பூர்வமாகச் சொல்லி வருகிறார்.

மேயர் அரசு ரேடியோவில் பேச மறுத்தவுடன் மெயில் பத்திரிகை எழுதுகிறது—மேயர் என்பவர் நகரத்தந்தை, அவருக்கு கட்சிப்பிரச்சனை கூடாது. ரேடியோவில் பேச மறுத்தது தவறு என்று எழுதுகிறது. மேயர் வானொலியின் அழைப்பை ஏற்றுக்கொண்டுரேடியோவில்பேசியிருந்தால்'' தி.மு.கழகம்ஆகாஷ்வாணி என்ற பெயரைவானொலி என்று மாற்ற வேண்டுமென்று கூறுகிறது. புலவர்களே பேசாதீர்கள்! பொதுமக்களே கிளர்ச்சி செய்யுங்கள்! என்று சொல்லுகிறது. அப்படிக் கூறிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மேயர் ரேடியோவில் பேசுவதற்குஒத்துக்கொண்டார். இவரா கொள்கையை கடைபிடிக்கும் லீடர். இப்படிப்பட்டவர்கள் உள்ள கட்சியினரிடம் நாட்டை ஒப்படைத்தால் நாடு என்ன கதி ஆகும் என்றும் எழுதும். இதை எதிர்பார்த்துத் தான் மேயர் நன்றாகச் சிந்தனை செய்து ஒரு பொருத்தமான முடிவுக்கு வந்தார். மெயில் ஆசிரியர் இதை உணர வேண்டும்.

நாம் யாரும் கட்சி சார்பில் போட்டியிடுவதாக இல்லை. இதை நாம் சென்னை சட்டசபையில் சொன்னோம். நிதியமைச்சரைப் பார்த்து நான் நகரசபைத் தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிடுவது சரியல்ல வென்றும், இதை காங்கிரஸ் கட்சியும், ஜஸ்டிஸ் கட்சியும் நெடுநாட்களாக வற்புறுத்தி வந்துள்ளதென்றும் கூறினேன். நிதியமைச்சர் சட்டசபையிலே சொன்னார்—ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ் போட்டியிடப் போவதில்லை என்று!

அவர் இப்படிக் கூறியதும் நான் எழுந்து உங்களுடைய முடிவை நான் வரவேற்கிறேன்— ஸ்தலஸ்தாபனங்களுக்கு கட்சி வாரியாக போட்டி யிடுவது சரியல்லவென்றும், ஆகையால் காங்கிரஸ் செய்துள்ள முடிவை நான் வரவேற்பதாகவும் கூறினேன்.

இப்படிச்சொல்லி விட்டு கடைசியில் தேர்தலில் போட்டியிட முன் வந்தார்கள்! முதலில் காங்கிரஸ் கட்சி ஸ்தல ஸ்தாபனங்களுக்கு போட்டியிடாது என்று கூறிய நிதியமைச்சர் சுப்பிரமணியத்துக்கு ஆசை யெடுத்தது — அரிப்பு எடுத்தது. காரணம் தூத்துக்குடியிலே போட்டி யிட்டார்கள் வெற்றி பெற்றார்கள்—தேவக் கோட்டையிலே போட்டியிட்டார்கள்—வெற்றி பெற்றார்கள். இந்த வெற்றிகளைக் கண்டார்கள். கோபியிலே மாநாடு நடந்தது. அந்த மகா நாட்டிலே தங்களது முடிவை மாற்றிக் கொண்டு காங்கிரஸ் கட்சி ஸ்தல ஸ்தாபனங்களுக்கு போட்டியிடுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினர். அவர்கள் இம் முடிவெடுத்த பின்னர் தான் தி.மு. கழகம் தனது முடிவை மாற்றிக் கொண்டது, பொதுக் குழுவை கூட்டியது திராவிட முன்னேற்றக் கழகமும் கட்சி சார்பில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு போட்டியிடுவது என்று தீர்மானித்தது அதன்படி அங்கங்கே அபேட்சகர்களை நிறுத்தினோம். வெற்றியும் பெற்றோம்.

''மேயர் பதவி வகிப்பவர்கள் ஒரு கட்சியின் சார்பாக இருக்கக் கூடாது, தன்னை ஒரு கட்சிக்காரராகவே நினைக்கக்கூடாது'' என்று கூறி வருகிறார்கள். இந்த ஞானோதயம் இவர்களுக்கு எப்போது பிறந்தது! திராவிட முன்னேற்றக் கழகம் பதவி ஏற்ற பிறகு ''கட்சிப் பாகுபாடு கூடாது, கட்சிப் பாகுபாடு கூடாது'' என்று சொல்லுகிறார்களே தவிர அதற்கு முன்பு பதவி வகித்த கட்சிக்கு, மேயர்களுக்கு ஏன் இந்த உபதேசத்தைப் புரியவில்லை!

கட்சிப் பாகுபாடு இல்லாமல் சபாநாயகர் பணிபுரிய வேண்டும் என்பது நியாயம்! சபாநாயகர் எல்லாக் கட்சிகளுக்கும் நீதி வழங்குபவர்! கட்சிகள் கூடாது என்பது சபாநாயகர் பதவிக்குத்தான் பொருந்தும்!

சட்டசபை சபாநாயகர் வேறு! கார்ப்பரேஷன் மேயர் வேறு! கார்ப்பரேஷன் மேயர் சபைக்குத் தலைமை வகித்து, சபையை நிர்வகிக்கும் பொறுப்பைப் பெற்றிருந்தாலும்-மேயருக்கு எல்லா கமிட்டிகளிலும் அங்கம் வகிக்கும் உரிமை இருக்கிறது! சட்டசபையின் சபாநாயகரின் பதவி அப்படியல்ல! சபாநாயகர் சபைக்குத் தலைவராக இருக்கும் உரிமையை மட்டும்தான் பெற்றிருக்கிறார்! ''மேயருக்கு கட்சி கூடாது'' என்று கூறுபவர்கள் அரசியல் அறிவு பெறாதவர்கள் அல்ல-அதை மறந்தவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்!

சென்னை சட்டசபைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்கள் நல்ல அரசியல் அனுவமிக்கவர் தான்! எல்லா கட்சிகளையும் ஒன்றாக பாவித்து நடத்தும் நல்ல குணமுள்ளவர்தான்! அதற்காக அவர் கதர் அணியாமலா இருக்கிறார்? மகாத்மாவை மறந்தாவிட்டார்? மேயர் மட்டும் வானொலியில் பேச மறுத்ததை மெயில் பத்திரிகை கண்டிக்க முன் வந்த காரணம் என்ன? இந்தக் கட்டுப்பாடு கார்ப்பரேஷன் எல்லையை மட்டும் தான் சுற்றி வளைத்திருக்கவேண்டும், என்பது-அவர்கள் அறியாமல் பேசும் பேச்சல்ல-தங்கள் கட்சியைப் பற்றி நினைத்துப் பார்க்காமல் பேசும் பேச்சாகும்!

நமது மேயருக்கு திருச்சி நகர சபை வரவேற்புக் கொடுக்க மறுத்ததற்குக் காரணம்-மேயர் அரசு ஒரு கட்சியை பின்பற்றி, வானொலியில் பேச மறுத்தது'' என்று அதன் தலைவர் கூறியதாகக் கூறப்படுகிறது! ''திருச்சி நகரசபை, மேயருக்கு வரவேற்பளிக்க மறுத்தது அடாத காரியம்-அரசியல் அநாகரிகம்'' என்று முதலமைச்சர் காமராஜர் கண்டித்தாரா? அவரும், மேயரை ஒரு கட்சிக்காரர்- தி.மு.க. என்று தானே நினைத்தார்!

திருச்சி நகரசபை வரவேற்பு அளிக்க மறுத்ததேதவிர, திருச்சி மக்கள் மேயரை வரவேற்கத் தவறவில்லையே! பக்கத்தில் இருக்கிற ஸ்ரீரங்கம் தானாகவே கூப்பிட்டு மேயருக்கு பெரும் வரவேற்பு அளித்ததை இவர்கள் காணத்தானே செய்தார்கள்!

திருச்சி நகர மக்கள் மேயருக்கு அளித்த வரவேற்பு வைபவங்களைப் பற்றி தம்பி கருணாநிதி கதைகதையாகச் சொன்னார்! அங்கே நடத்தப்பட்ட மாபெரும் ஊர்வலமும், உற்சாகமான வரவேற்பும், பொதுக் கூட்டமும்- ஒவ்வொரு வட்டத்தின் சார்பிலும் மேயருக்கு வரவேற்பளித்து, மலர்மாலைகள் அணிவித்த காட்சியும்-வியாபாரிகள், தொழிலாளிகள், கழகங்கள், சங்கங்கங்கள், இளைஞர்கள், பெரியவர்கள் அளித்த நல்ல வரவேற்பும் பற்றி தம்பி கருணாநிதி எடுத்து எடுத்துச் சொன்னபோது என் உள்ளமெல்லாம் மகிழ்ந்தது! மேயருக்கு அங்கு அணிவித்த மாலைகளை-அவர் உட்கார்ந்திருக்கும் காரின் சீட்டின் பக்கத்தில் அடுக்கி வைத்தால் அவரைவிட உயரமாக இருக்கும் என்று கருணாநிதி பூரித்த உள்ளத்தோடு கூறி மகிழ்ந்தார்!

அதைப் பார்த்தாவது காங்கிரஸ்காரர்களுக்கு வெட்கம் பிறந்திருக்க வேண்டும்! ''நாம் மதிக்கா விட்டாலும் அவர்களை நாடு மதிக்கிறதே'' என்ற எண்ணம்அவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்!

நகரசபையிலே புதியவரிகள் போடப் போகிறார்களாமே! ''பார்த்தீர்களா! பார்த்தீர்களா'' இவர்கள் வந்தவுடனேயே வரிகள் போட ஆரம்பித்து விட்டார்கள் என்று கூறி வருகிறார்களாம்! ஆமாம்! நிச்சயமாக வரி போடத்தான் போகிறோம் எங்கே போடப் போகிறோம்! என்பதையெல்லாம் - பேசுபவர்கள் தெரிந்து பேச வேண்டும்!

ராஜசர் முத்தையா செட்டியாருக்கு வரிபோட்டால் முனியனுக்கு என்ன கவலை! ஹாஜா ஷெரிப்புகளுக்குப் போட்டால் ஆண்டியப்பனுக்கு என்ன ஆயாசம்! வழக்கறிஞருக்கு வரிபோட்டால் வக்கீல் குமாஸ்தா ஏன் கவலைப்பட வேண்டும்!

போட வேண்டிய இடத்தில் வரி போட்டு, வாங்கித் தருகிறவர்களுக்கு, வாங்கித் தருவோம்!

ஏழை, எளியவர்களை வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஏழைகளைப் பாதிக்கிற வரிகளைப் போட்டு அவர்களை வாட்டிவதைக்காது!

நாங்கள் வரிகளே போடாமல் ஆட்சியை நடத்துவோம் என்று சொன்னது போலவும்-இப்போது திடீரென்று வரிகள் போட்டது போலவும் பேசுகிறார்கள்!

''வரிகள் போடாமல் ஆட்சியை நடத்த முடியும்'' என்று நாங்கள் எப்போதும் சொன்னதில்லை!

பருப்பு இல்லாத கல்யாணமில்லை! பெண் இல்லாமல் குடித்தனம் இல்லை! வரியில்லாமல் ஆட்சியுமில்லை!

தாழ்ப்பாள் இல்லாத கதவு பயன் படாது! தண்ணீர் ஓடாத வாய்க்கால்களாலும் வளம் கிடைக்காது!

இதனால் எல்லோருக்குமே வரி

தெருத் தெருவாக அலைந்து, மக்களைக் கண்டு குறை தீர்க்கும் மேயருக்கு வானொலிப் பேச்சு ஏன்?

போட வேண்டும் என்ற நியதியும் இல்லை! போடுகிறவர்களுக்குப் போட வேண்டும்! தாங்க முடியாதவர்களின் வரியைக் குறைத்து ஏழைகளுக்கு நல் வாழ்வு அளிக்க வேண்டும்!

நமது மேயர் அரசுவும், கட்சித் தலைவர் ஜீவரத்தினம் அவர்களும், வரிக் கமிட்டித் தலைவர் முனுசாமியும் ஏழைகளைப்பாதிக்காத வகையில் எப்படி எப்படி வரிகள் விதித்து நகரசபையின் நிர்வாகத்தைச் செவ்வனே நடத்தி. நகர மக்களுக்கு நல் வாழ்வளிக்க முடியும் என்று யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்! இதைப்பற்றி எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதை இங்கே சொல்ல விரும்புகிறேன்!

வீட்டு வரி—ஒரு மாத வரியை இரண்டு மாத வாடகை பணத்தின் மூலம் கணக்கிட்டு வரி விதிக்கிறார்கள்! அந்த முறையை மாற்றி எட்டணா என்றிருப்பதை பத்தணாவாக மாற்றினால் இது ஒன்றும் ஏழையைபாதித்து விடாது!

ஒரு வீட்டின் மேல் தட்டிலே சொந்தக்காரர் குடியிருந்து, கீழ்த்தட்டை வாடகைக்கு விட்டு அந்த வாடகையாலே. காலத்தை கழிக்கும் நிலையில் உள்ளவர்களை பாதிக்கக் கூடாது!

மாமன் பேராலே ஒரு வீடும், மைத்துனன் பேராலே ஒரு வீடும், கணக்கப்பிள்ளை பேராலே ஒரு வீடும்—அங்கப்பன் நாயக்கன் தெருவில் இரண்டு வீடும்—அதற்குப் பக்கத்துத் தெருவிலே ஒரு வீடும் வைத்திருப்பவர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு ஏற்றவாறு வரிவிதிக்க வேண்டும்!

ஒரு பெரிய தோட்டத்தில் சுற்றிலும் நாலுமனை, ஆறுமனை என்று இடம் விட்டு விட்டு-பத்துமனை, இருபதுமனைக்கு-அலங்காரத்திற்காகவும், அந்தஸ்திற்காகவும் பங்களாகட்டி, ஆரோக்கியத்தையும், நறுமணத்தையும், தென்றல் தரும் இன்பத்தையும் அனுபவித்து வரும் சுகபோக கனவான்களை கண்டு பிடித்து அவர்களுக்கு ஏற்றவாறு வரி விதிக்க வேண்டும்!

"கடல் போன்ற வீடு! என்ன நறுமணம், என்ன நறுமணம்! என்ன சுகம், என்ன சுகம்" என்று புகழ்ந்து பேசப்படுபவர்களின் மாளிகைகளுக்கு--வீட்டைச் சுற்றி—தென்றல் தவழ்ந்து வருவதற்காக விடப்பட்ட காலிமனைகளுக்கும்—அவை வீடுகளாக கட்டப்பட்டிருந்தால் என்ன வரிவிதிக்கப்பட வேண்டுமோ, அதையும் கணக்கெடுத்து வரிவிதிக்க வேண்டும்!

இதைத் தான், போட வேண்டிய இடத்தில் வரி போட்டுச் செய்ய வேண்டியகாரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறோம்!

செல்வச் சீமான்களிடம் உள்ள வெல்லக் கட்டியை வாங்கி மக்களிடம் கொடுத்து நீங்களும் கொஞ்சம் ருசித்துச் சாப்பிட்டுப் பாருங்கள் என்று கொடுத்தால்—"ஐயோ வரி போடுகிறார்களே, ஐயோ வரி போடுகிறார்களே" என்று கதறுகிறார்கள்!

3-வது ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றி உட்கார்ந்துயோசித்துப் பார்ப்பதற்கு நேரு பெருமகனார் உதக மண்டலத்திற்கு வருகிறார்!

உதக மண்டலம் தரும் குளு குளுப்பைக் கண்டு, சுகத்தை அனுபவித்து—மேகம் தழுவி நிற்கும் வானத்தைக் கண்டு. அது மூத்து முத்தாய்ப் பொழியும் மழை நீரைக் கண்டு-பச்சையை பார்த்து, பசுமையைக் கண்டு—"ஆகா! தென்னாடு என்ன வளம்! என்ன வளம்" என்று ஆனந்தப்பட்டு—"இந்த நாட்டிற்கு எத்தனை கோடி ரூபாய் புதிதாக வரிவிதிக்கலாம்" என்ற எண்ணம் நேருவின் மனதினாலே அலைமோதிக்கொண்டிருக்கக்கூடும்!

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றிக் கூறினால் உங்களில் சிலர் ஆச்சரியத்தால் மூர்ச்சையடைந்து போவீர்கள்! மூன்றாவது திட்டத்திற்கு பதினொரு ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கிறார்கள்! அமெரிக்காவும். இங்கிலாந்தும் இந்த மூன்றாவது திட்டத்தை வெற்றிகரமாக முடித்துத் தர முனைந்து நிற்கின்றன! 11 ஆயிரம் என்றாலே மாரடைத்துப் போகும் நிலையில் உள்ள நாம் பதினொராயிரம் கோடி என்றால் எப்படி அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியும்!

மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற இரண்டாயிரம் கோடி ரூபாய் புதிய வரிகள் வேறு போடுகின்றனர்! இந்த இரண்டாயிரம் கோடி ரூபாய் புதிய வரிகள் போட இருக்கும் இவர்கள் தான் "அரசு புதிய வரி போடப் போகிறாராமே என்று கூப்பாடு போடுகிறார்கள்!

விடியற் காலை 4 மணிக்கும் வீட்டுக்குப் படுக்கவராதவன் பக்கத்து வீட்டுக் காரியைப் பார்த்து இரவு 12 மணி வரையில், கதவு திறந்திருந்ததே! ஏன்? என்று கேட்டானாம்!

வரியை ஏழைகளிடமிருந்து ஒருநாளும் வசூல் செய்யத்திட்டமிட மாட்டோம்! ஏழைகளைப் பாதிக்காத வகையில் தான் எங்கள் வரி இருக்கும்! அந்தப் பண்பு எங்களிடமிருக்கிறது, அந்தப் பழக்கம் எங்களிடமிருக்கிறது!

பொது மக்களுடைய கஷ்ட நஷ்டத்தை உணர்ந்தவர்கள் தான் இப்போது கார்ப்பரேஷனில் இருக்கிறார்கள்! நமது மேயர் அரசு-நமது துணை மேயர் சிவசங்கரன் இவர்களெல்லாம் பங்களாவாசிகள் அல்ல!

நமது மேயர் அரசு—நேராக காஸ்மாபாலிடன் கிளப்பிலிருந்து கூட்டத்திற்கு வந்து, ஒரு பதினைந்து நிமிடம்-கையிலிருக்கும் கடிகாரத்தைப் பார்த்து பார்த்து பேசி விட்டு- 'ஜிம்கானா மைதானத்தில் நடைபெறும் டான்சுக்கு தலைமை வகிக்கப் போக வேண்டும்--எனது மருமகன் ஏரோபிளேனில் அமெரிக்கா செல்ல இருக்கிறார், விமான நிலையத்திற்கு வழி கூட்டி அனுப்புவதற்கு செல்ல வேண்டும்" என்று கூறும் நிலையிலுள்ளவர் அல்ல! இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்பு ஒரு சேரியைப் பார்த்து விட்டு வந்திருப்பார்—நடுத்தர மக்கள் வாழும் சில பகுதிகளுக்குச் சென்று விட்டு வந்திருப்பார்!

ஒரு பதினைந்து நிமிடத்திற்கு மேல் கூட்டத்தல் இருக்கக் கூடாது-' அப்படி இருந்தால் அது மேயர் பதவியின் அந்தஸ்தைக் குறைக்கும்" என்று எண்ணுபவர் அல்ல, இப்போதுள்ள மேயர்!

நமது உதவி மேயரைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும்! "உதவி மேயர் சிவசங்கரனை முதன் முதலாக எப்படிச் சந்தித்தேன்" என்பது பற்றி உங்களுக்குப் பல தடவை சொல்லி இருக்கிறேன்! ஒரு பழைய சைக்கிள் வண்டியில் ஏறிக் கொண்டு ஓட்டுக் கேட்கப் போகும் போது தான் நான் அவரைப் பார்க்க நேர்ந்தது! இப்படிப்பட்டவர்களா ஏழைகளைப் பாதிக்கும்வரிகளைப்போடுவார்கள்!

"பச்சையப்பன் அறநிலைய பாதுகாப்புட்ரஸ்டுக்கு நகரசபை உறுப்பினரிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று ஒரு நண்பர் என்னிடம் வந்து கூறினார்! "யாரைத்தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்" என்றும் கேட்டார்! அதற்கு நான்—எங்களிடம் 45 பேர்கள் இருக்கிறார்கள்-அவர்களில் யாரை யாவது தேர்ந்தெடுத்துக்கொள்ளுகிறோம்" என்று கூறினேன்!

அதற்கு அந்த நண்பர்—"எல்லோரும் உறுப்பினராக வர முடியாது – சொத்து இருக்க வேண்டும். ரூ150 வரை வரி கட்டுபவராகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்! இப்படிப்பட்டவர்களைத் தேடித் தேடிப் பார்க்கிறேன்—ஒரு ஆளைக் கூட கண்டு பிடிக்க முடியவில்லை! முருகேசனைக் கேட்டேன், சிட்டி பாபுவைக் கேட்டேன், மற்ற மற்ற தோழர்களைக் கேட்டேன்! எல்லோரும் கையை விரித்து விட்டார்கள்! இப்படி ஏழை, எளியவர்கள் நிறைந்துள்ளவர்களா, உங்களுக்குப் புதிய வரிகளைப் போட்டு வாட்டி வதைப்பார்கள்!

இப்போதுள்ள அமைச்சர்களைப்பற்றியும்—அப்போதிருந்த ஜஸ்டிஸ் கட்சி அமைச்சர்களைப் பற்றி நான் ஓரளவு அறிந்திருக்கிறேன்!

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி புரிந்த காலத்தில் அமைச்சராக இருந்த மறைந்த முத்தையா முதலியாரை உங்களில் பலருக்குத் தெரிந்திருக்க முடியாது என்றே நினைக்கிறேன்!

முத்தையா முதலியார் அவர்கள் அமைச்சர் பதவி ஏற்ற காலத்தில் அவருக்கென ஒதுக்கப்பட்ட மாளிகையில் அவர் குடிபுக மறுத்து விட்டார்!

"இந்த மந்திரி சபை இரண்டாண்டோ, மூன்றாண்டோ நாட்டை ஆளுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்! அதன் பிறகு நான், இவ்வளவு பெரிய மாளிகையிலிருந்து வெளியேறத் தானே வேண்டும்-அமைச்சர் பதவி போனவுடன் இரவோடு இரவாய்-கடன்காரர்கள் வந்துவிடப் போகிறார்கள் என்று சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மேஜைகளையும்!-கடன் வாங்கிப் போடப்பட்ட சோபாக்களையும் தூக்கிக் கொண்டு தானே போக வேண்டும்" என்று கூறினார்!

முத்தையா முதலியார், மைலாப்பூரில் குளக்கரைக்குப் பக்கத்திலுள்ள தனது சிறிய ஓட்டு வீட்டிலிருந்தே மந்திரி வேலையைப் பார்த்தார்! முத்தையா முதலியாரின் எளிய வாழ்க்கையும், சிறந்த குணமும், நல்ல பண்பாடும் என் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன! இதனால் முத்தையா முதலியாரிடத்தில் எனக்குத் தனி மரியாதையும் ஏற்பட்டது!

நமது மேயரை மாடி வீட்டுக்காரர்கள் பார்க்கிறார்கள்- "நீயா மேயர்-சரி சரி! கூறி என்று எத்தனையோ மாளிகை வாசிகள் இருக்கும்போது இந்தபஞ்சையா நமக்கு மேயர்" என்று எண்ணுகின்றனர்! இப்படிப்பட்ட மேயரா உங்களுக்கு வரிகளைப் போட்டு கசக்கிப் பிழிவார் என்று நினைக்கிறீர்கள்?

மூர்மார்க்கட் வியாபாரிகள் மேயருக்கு சிறப்பான வரவேற்பைத் தந்து விட்டு தங்கள் குறைகளை எடுததுச் சொல்லி இருக்கின்றனர்!

இங்களித்த வரவேற்பும், அணிவித்த மாலைகளையும் காணும் போதே எனக்குத் தெரியும்! "மூர்மார்க்கெட்" வியாபாரிகள் மிக்க சாமர்த்தியமானவர்கள் என்பதையும் அறிந்து கொண்டேன்!

நல்லப் புத்திசாலி பெண் இப்படித்தான் கணவனிடம் நடந்து கொள்ளுவாள்! வேலையிலிருந்து கணவன் திரும்பியவுடன் "வாங்க வாங்க" என்று இன்முகம் காட்டி உபசரித்து, உட்காரவைத்து சாப்பாடு போட்டு விட்டு தனக்கு வேண்டியவைகளை எடுத்துக்கூறுவாள்! "ஏன் இந்த சின்ன இலையைப் போட்டிருக்கிறீர்கள் என்பாள்-பெரிய இலையை கொண்டு வந்து போடுவாள், தண்ணீர் தெளிப்பாள்—ஏன் குறைவாக சாப்பிடுகிறீர்கள். என்பாள்—ரசம் கொஞ்சம் போடட்டுமா என்பாள்—உறுகாய்வைக் — கட்டுமா என்பாள்! கணவன் சாப்பிட்டவுடன் தாம்பூலத்தை மடித்துக் கொடுத்து விட்டு—எனக்கு கன

(6-ம் பக்கம் பார்க்க)

வடவர் தாளேந்தி நிற்கும் காங்கிரசாரே! உங்கள் பிள்ளைகளும், பேரன்களும் எங்கள் பக்கம் தான்! எங்கள் பக்கம் தான்!

1-ம் பக்கத் தொடர்ச்சி

நாம் 55 இடங்களில் வெற்றி பெறவில்லை. இதை நாம் நன்கு உணர்கிறோம்.

நாற்பத்தைந்து இடங்களில் வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்புய பெற்றதோடு நமது 'வெற்றி' முடியவில்லை—இது முழு வெற்றி என்ற 'அகந்தை' யால், நாம் தலைவிரித்து ஆடவில்லை. தோற்றது குறித்து துவண்டு மூலையில் முக்காடிட்டு உட்காரவும் இல்லை.

பெற்ற வெற்றிக்கு மகிழ்ச்சி! மேலும் பெற வேண்டிய வெற்றிகளுக்கான முயற்சி—இதுதான் நாம் தேர்தலில் பட்ட பாட்டினால் ஏற்படும் பயிற்சி! பெறுகின்ற பாடம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எப்போதும் பொது மக்களைச் சந்தித்தபடியே உள்ளனர். வெற்றி—தோல்வி எந்தச் சூழ்நிலையிலும்! இனியும் அப்படித்தான் இருப்பர் என்பதும் உறுதியே!

இங்கே, ஜாம்பஜார் வட்டத்தில்தோல்வியுற்றகழகத்தோழர் திரு. நீலநாராயணன், மற்றும் தோற்ற தோழர்களான திரு. அரங்கநாதன். திரு. வி, என், சுப்பிரமணியம் ஆகியவர்கள் தோல்வியால் துவண்டா விட்டார்கள்! மக்களைச் சந்திக்காமல் மூலையில் ஒதுங்கி முக்காடா இட்டுக் கொண்டார்கள்! இல்லையே! வெற்றி கண்ட தோழர்களைவிட ஒருபடி மேலான உணர்ச்சியுடனும், அதிக மகிழ்ச்சியுடனும் தான் பாடுபட்டு வருகின்றனர் என்பதைக் காண்கிறோம்!

மற்றவர்கள், அதிலும் பெரும்பாலும் காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்தில் மக்களிடம் தலை காட்டுவார்கள். வெற்றி பெற்றாலும் சரி, தோற்றாலும் சரி மீண்டும் மறுதேர்தல் வரை மக்களைச் சந்திக்க மாட்டார்கள், சந்திப்பதும் இல்லை, மக்களிடமிருந்து மறைவார்கள்!

ஆனல், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் கடமை உணர்வு மிக்கவர்கள்—செயல் வீரர்கள் என்பதால் தேர்தல் காலத்தில் மட்டும் அல்ல—வெற்றி அல்லது தோல்வி எது ஏற்படினும் என்றும் போல் எப்போதும் மக்களைச் சந்தித்தே வருகின்றனர்—இது உறுதி!

சிலர் பேசுகிருர்கள்—ஏசுகிருர்கள்—இவர்களால் என்ன செய்துவிட முடியும்! எதைச் சாதித்து விடுகிருர்கள்—பார்ப்போம் என்று!

எங்களால் எதையாவது செய்ய முடிந்தால் 'முடியும்' என்று செய்து காட்டுகிறோம்! 'இல்லை' என்றால், 'முடியாது' என்று கூறுகிறோம். இந்த ஆட்சியில் செய்ய முடியவில்லை என்பதையும் மக்கள் மன்றத்தில் சொல்லி விடுகிறோம்! இதிலே என்ன, வெட்கம்? துக்கம்? இருக்கின்றது, எங்களுக்கு!

ஒரு ஆறுமாத காலம் பொறுப்பை நடத்திப் பார்க்கிறோம். நல்லதையெல்லாம்செய்து பார்க்கிறோம்—முடிந்ததையெல்லாம் செய்து காட்டுகிறோம், முடியக் கூடிய—நல்ல திட்டங்களை தீட்டுகிறோம். இந்தக் காலத்தில் 'யார், யார்' நல்லவைகளும் நிறைவேற குறுக்கே இருந்தார்கள்—கெடுத்தார்கள்-தடையாக விளங்கினார்கள்—முட்டுக்கட்டை போட்டார்கள் என்பவைகளையும் மக்களுக்கு எடுத்து விளக்குகிறோம்!

சாதிக்க முடிந்ததை சாதித்து-முடியாததை முடியவில்லையென்று வெளிப்படையாகக் கூறிவிடுகிறோம்!

மாநகர் ஆட்சிப் பொறுப்பில் கழகத் தோழர்களிடமோ, தலைவரிடமோ, 'ஆற்றல்' இல்லையென்று யாரும் கூறிவிட முடியாது! அப்பழுக்கு ஏதும் சொல்லவும் முடியாது! செயலாற்றுவதில் வல்லவர்கள் தான் பணிபுரியும் பண்பு படைத்தவர்கள் தான் அவர்கள்! ஆனல் 'முடியாத சூழ்நிலை'க்கு யார் காரணம்? என்பதை வெட்ட வெளிச்சமாக்கி விடுகிறோம்!

நகரத் தந்தை அரசு நல்ல திட்டம் தீட்டி, அதனை மாநில அரசு அனுமதிக்காவிட்டால். 'இதோ நல்ல திட்டம்! ஆனல் முதலமைச்சர் திரு. காமராஜர் மறுத்து விட்டார், என்று விளக்குகிறோம்! ஸ்தல ஸ்தாபன மந்திரி திருமதி லூர்தம்மாள் உதவ மறுத்து கைவிரித்து விட்டார் என்று உள்ள நிலைமையை மக்களிடம் சொல்லி விடுகிறோம்! இதிலே எங்களுக்கு என்ன வெட்கம்! துக்கம், உள்ளது?

நடைமுறையில் கழகத்தவருக்கே ஆட்சிப் பொறுப்பு நடத்தப் பயிற்சி போதவில்லை என்பதை உணர்ந்தால், மனதார ஒரு சிறிதும் வெட்கமோ, துக்கமோ இன்றி சொல்லத் தவற மாட்டோம். 'பயிற்சி போதவில்லை, பயிற்சி பெற்று, 5 வருடம் கழித்து வருகிறோம். என்று அவசியமாயின் (அவசியம் நிச்சயம் ஏற்படாது என்றே கருதுகிறேன்) சொல்லத் தான் சொல்லுவோம்!

காங்கிரஸ்காரர்களைப் போல, வீண் ஜம்பமடித்தோ, வீராப்போ பேசிவிட்டு, பிறகு 'அகப்பட்டு' விழிக்கும் 'அறிவிலிகள்! அல்ல நாங்கள்!

உள்ளதை உள்ளபடி கூறத் தயங்கமாட்டோம். முடிந்ததைச் செய்வோம். முடியாததை முடியவில்லை என்று சொல்ல வெட்கப்படவே மாட்டோம்! வீண் ஜம்பமும், வீராப்பும் பேசிடவும் மாட்டோம்.

நகர மன்றத்தில் உள்ள 45, கழகத் தோழர்களில் மூன்று பேருக்குத் தான் ஏற்கனவே, உறுப்பினராக இருந்து, அதன் மூலம் நகர மன்ற காரியங்களில் பயிற்சி ஏற்பட்டுள்ளது, மற்ற 42 பேருக்கும் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையைச் சொல்ல நாங்கள் தயங்கவில்லையே!

நகர மன்றத்தில், எது, எது எங்கே யெங்கே உள்ளது! என்னென்ன எப்படி யெப்படி? இப்போது தான் அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள்—புரிந்தும் வருகிறார்கள்! எவரை மிரட்ட வேண்டும்—யார்யாரை உருட்டி வேலை வாங்க வேண்டும், எதிலே—எவரிடம் கண்டிப்பு தேவை—தட்டிக் கொடுக்க வேண்டிய சமயம் எது—ஆட்கள் யார் யார்? என்பதில் எல்லாம் பயிற்சி பெற்று வருகிறார்கள்!

பத்து நாளில் கவனிக்கப்படும் கடிதம். எட்டு நாட்களில்—ஆறு நாட்களில் கவனிக்கப்படும் வழி வகைகளையும் அவர்கள் இனித் தான் கண்டாக வேண்டும். கண்டும் வருகிறார்கள்.

நகர மன்ற நிலைமைகளைப் புரிந்து கொள்ள ஒரிரு மாதங்கள் ஆகக் கூடும்—அவ்வளவு தான். மற்றபடி அவர்கள் செயல் புரியும் ஆற்றல் படைத்தவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை, அவர்களால் முடிந்ததை—முடியக் கூடியதை எல்லாம் நிச்சயம் செய்தே தீருவார்கள்-தவறமாட்டார்கள்!

இதிலே, யார், யார் கழகத்திற்கு வாக்களித்தார்கள்—எவரெவர் வாக்களிக்கவில்லை என எண்ணும் 'இழிகுணம்; கழக உறுப்பினர்கள் எவரிடமும் ஒரு சிறிதும் கிடையவேகிடையாது!

எவருக்கும் எதற்காகவும் கேடு பயக்கும் 'கெடுமதி' இல்லை என்பதைச் சற்று முன்பு பேசிய 58 வது வட்ட உறுப்பினர் திரு. சிட்டிபாபு தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார்.

வட்டங்களின் சுகமும் வளமும், அழகும் பொலிவும் வட்ட நகர மன்ற உறுப்பினர்களது பொறுப்பு என மக்கள் எண்ணி வாளாக இருந்துவிடக் கூடாது.

வட்ட உறுப்பினர்களை நல்லபடி 'வேலை வாங்கும் பொறுப்பு' வாக்காளர்களாகிய உங்களைத் தான் சார்ந்துள்ளது. இதனை உணர்ந்து அவர்களிடம் நீங்கள் 'வேலை வாங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உங்களது நீதி—நியாயம்—நேர்மை நிறைந்த கோரிக்கைகளை—நடைமுறைக்கு ஏற்றவைகளை கழக உறுப்பினர்கள் செய்யத் தவறினால்-கழகப் பொதுச் செயலாளன் என்ற முறையில், அவர்களைக் கண்டிக்கும் பொறுப்பு'' என்னைச் சார்ந்தது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு!

தேர்தல் காலத்தில் இருந்த எழுச்சி—உணர்ச்சி, ஆக்கம்—ஊக்கம் அனைத்தும் இப்போதும் தொடர்ந்து தேவை, உங்களுக்கும். வட்ட உறுப்பினர் பொறுப்பு என 'கைகட்டி' நீங்கள் இருப்பது 'கழகப் பணி' யல்ல—மக்களுக்குச் சேவை செய்வதும் ஆகாது என்பதை உணர்ந்து நடக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மக்கள் செய்யக் கூடியவரையில் அனைத்தையும் செய்து, வட்ட உறுப்பினரை மேற்கொண்டு தொடரும் படி உதவ வேண்டும். உறுப்பினர் அவரால் முடிந்தவரை செய்து.

(7-ம் பக்கம் பார்க்கவும்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காம்பரசேலை வேண்டும், எனக்கு அந்த சாமான் வேண்டும், இந்த சாமான் வேண்டும் என்பாள்! யூகமுள்ள கணவன் தன் மனைவி செய்யும் உபசாரங்களிலிருந்தே இவைகளையெல்லாம் புரிந்து கொள்வான்!

மூர்மார்க்கட்காரர்கள் சொன்னகுறைகள் அனைத்தும் நியாயமானது, அவசியம் கவனிக்கப்பட வேண்டியதுமாகும்! அவர்கள் சொன்ன குறைகள் அனைத்தும் இங்குள்ள வியாபாரிகளுக்குள்ள குறையாக மட்டும் நினைக்க முடியாது! பொது மக்களுக்கும் இது அசௌகரியமாகத் தான் இருக்கும்!

இந்தக் குறைகளை மேயரும், உதவி மேயரும் கவனித்துத்தீர்ப்பார்கள் என்று கூறிக் கொண்டு நீங்கள் அளித்த வரவேற்புக்கும் பாராட்டுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி செலுத்திக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளுகிறேன்!

வணக்கம்

எங்கள் அறிவுப் படை, ஆற்றல் படையை தடுத்திடும் தீரன் தான் யார்!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புள்ள கமிட்டித் தலைவர்களிடமும். அதிகாரிகளிடமும். தலைவரிடமும்ஒப்படைத்து சாதிக்க முயல்வார்கள். முடிந்ததைச் செய்தே தீருவார்கள், எனவே அவரவர்கள். அவர்களால் முடிந்த அளவு செய்து, மாநகர் ஆட்சி சீரும் சிறப்புமாக நடந்து, கழகத்திற்குப் பெருமையும் பெருமிதமும் ஏற்பட உதவி செய்யும்படி மீண்டும் வலியுறுத்தி வேண்டிக் கொள்கிறேன்!

மாநகராட்சி மன்றத்தில் உள்ள, நமது கழக உறுப்பினர் கட்டும் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்! தோழர்களே! உங்கள் வட்டத்தில் உள்ள மக்கள் அனைவரையும் அன்போடு, அணைத்துச் செல்லுங்கள்—சினத்தைக் குறைத்து சிரித்த முகத்துடன் பேசுங்கள்! கண்டிப்பு மட்டும் போதாது—கனிவும் அவசியம். எரிந்து விழாமல். எழிலுடன் பணி செய்யுங்கள்!

மாநகராட்சி மன்றப் பணிகளிலே அடியோடு, நல்ல மாறுதல்களை எதிர்ப்பார்க்காவிட்டாலும், மாறுவதற்கான சூழ்நிலையை நாம் அமைப்போம் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதைக் கவனத்தில் வைத்துக் காரியமாற்றுங்கள்!

பொது மக்களது நியாயம், நீதியும், நேர்மையும் மிக்க கோரிக்கைகளை—நடைமுறைக்கு ஏற்றவைகளை உடனடியாகச் செய்யுங்கள். இதிலே, தோழர்களது கரங்களிலே 'கறை' படியும் நிலைமை. தோழர்களாலும் சரி, பொது மக்களாலும் சரி, எந்தச் சூழ்நிலையிலும்ஏற்படாதபடி விழிப்புடன் வேலை செய்ய வேண்டும் எனப் பெரிதும் வலியுறுத்திக் கூறுகிறேன். கறை படியும் வண்ணம், கழகத் தோழர்கள் நிச்சயம் நடக்கமாட்டார்கள். எனினும், வேண்டுமென்றே, வலிந்து 'கறை'படுத்த முயல்வோரின் முயற்சிக்கு எப்படியும் 'பலி'யாகக் கூடாது. இதில் மிகவும் எச்சரிக்கை தேவை!

நகர மன்ற, நிலைக்குழுக்களில், தி. மு. கழகம். மற்ற கட்சிகளுக்கும் நியாயமான இடம்தர, தானாகவே பெருந்தன்மையோடுமுன் வந்தது, ஆனால், காங்கிரஸ் கட்சியினரின் 'பேராசை'யால் அந்த வாய்ப்பினை இழந்துள்ளனர். சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சியினருக்கு இவர்கள் அளித்துள்ள நிலைமையைப் பற்றி எண்ணிப்பார்த்தேனும், காங்கிரசார் வெட்கப்படவேண்டாமா? என்று தான் கேட்கிறேன்!

வானொலியில், மாநகராட்சி மன்றத் தலைவர், அ. பொ. அரசு பேச மறுத்தது பற்றிப் பலரும், பலவிதமாக ஏசியும், தூற்றியும் பேசி வருகின்றனர். இதிலே தப்போ, தவறோ ஏதும் இல்லை.

மானமுள்ள தமிழன், கடமையுணர்ச்சியுள்ள தமிழன் செய்ய வேண்டிய செயலைத் தான் தோழர் அரசு, செய்து காட்டினார்.

சென்னை நகரின் மேயராகப் பதவியேற்றதும், நகர மக்களுக்கு வானொலி மூலம் செய்தியறிவிக்க சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள சம்பிரதாயத்தை மேயர் அரசு உடைத்து விட்டார். பழித்து விட்டார் என்று பறை சாற்றப்படுகிறது. இது உண்மைக்கு மாறானது!

மேயர் அரசு. 'சம்பிரதாயம் தப்பு, தவறு என்று ஒருபோதும் சொல்லவில்லையே! பழித்திடவும் காணோமே! வானொலியில், மேயராக உள்ள 'அவர்' பேச மறுத்தார்—இதுதான் உண்மையே தவிர, 'சம்பிரதாயம்' தவறு எனக்கூறவில்லை.

மேயர், 'வானொலி' மூலம் நகர மக்களுக்கு செய்தி அறிவிப்பது என்று ஒரு சம்பிரதாயம்—வழக்கம் இருப்பது தவறு என்று அரசு கூறவில்லை. பேச அழைப்பதோ—அழைத்ததோ தப்பு என்றும் சொல்லவில்லை. மேயர் பேசுவதும் கூடாது என்றும் அவர் குறிப்பிடவில்லை.

ஆனால், மேயர் அரசு, வானொலியில் பேச மறுத்தார். இது தான்உண்மை! ஏன். மறுத்தார்?

வானொலியில் மேயர், பேசும் சம்பிரதாயமோ, அதற்காக அழைப்பதோ, அழைப்பை ஏற்றுப் பேசுவதோ தவறு என்று கூறி அவர் பேச மறுக்கவில்லை என்பதைத் தான் நன்கு கவனிக்க வேண்டும். சம்பிரதாயம், பேசுவது, அழைப்பது எல்லாம் சரி! ஆனால் பேச அழைத்த 'இடம்' எப்படிப்பட்டதாக உள்ளது இப்போது? அந்த இடம் தற்போது நாட்டு மக்களின் 'கொதிப்புக்கு' காரணமான—ஆளான இடமாக இருக்கின்றது. எனவே தான் நகரத் தந்தை என்ற முறையில் அரசு, நாட்டு மக்களின் எண்ணத்தை எதிரொலிக்கும் வகையில் பேச மறுத்துள்ளார்! இது தான் உண்மை!

'வானொலி' என்று இதுவரை கடந்த இருபதாண்டுக்கும் மேலாக ஒலித்து வந்த தூய சொல்லினை—தமிழ்ச் சொல்லினை அகற்றியுள்ள இடம் அது! அது மட்டுமா! இந்த தூய தமிழ்ச் சொல்லுக்கு மாறாக—'ஆகாஷ்வாணி' என்ற இல்லாத, ஆகாத சொல் புகுத்தப்பட்டுள்ளது!

'ஆகாஷ்வாணி'யை அகற்று! 'வானொலி' என்று ஏற்கனவே இருந்த தமிழ்ச் சொல்லே தேவை என்று தமிழ் மக்கள் விடுத்த கோரிக்கையை துச்சமெனக் கருதி அவமதிக்கும் இடத்தில்—அரசு எப்படிப் பேசமுடியும்!

எனவே தான், மானமுள்ள தமிழன் — கடமையுணர்சசியை ஆற்றும் விதத்தில் மக்களது எண்ணத்தின் எதிரொலியை உணர்த்தும் வண்ணம் 'ஆகாஷ்வாணி'யில் பேச மறுத்தார், அரசு! இதனால் அவரது கண்ணியம் பெரிதும் உயர்ந்தது!

தமிழகத்தின்—தமிழ் மக்களது எண்ணத்தை எதிரொலித்து— மேயர் அரசு. 'ஆகாஷ்வாணி'யில் பேச மறுத்ததால்—இந்தப் பிரச்சினை—அகில உலக மெங்கும் தெரிந்து விட்டது. பெரிதும் பேசப்படும் அளவுக்குமிக விரைவில்—சுலபமாக விளம்பரமும் ஆகிவிட்டது.

'வானொலி'யில்பேசநான்மறுத்தால், கழகப் பத்திரிகையான 'நம் நாடு' வெளியிடும். அறிஞர் அண்ணா மறுத்திருந்தால், 'Annadurai also Spoke'--அண்ணாதுரையும் பேசினார் என்று போட்டு வரும் சில ஆங்கில தமிழ் ஏடுகளில் மட்டும் செய்தி வரும்.

ஆனால், சென்னை மாநகரத் தந்தை முதற் குடிமகன்-மேயர். வானொலியில் பேச மறுத்தார். உடனே இச்செய்தி அகில உலகு எங்கும் பரவி விட்டது—பரப்பப்பட்டுள்ளது. இச்செய்தி வந்த சமயம் நான் பம்பாயில் இருந்தேன். அங்கு, ஆங்கிலம்; குஜராத்தி, மராத்தி, இந்தி உருது முதலிய எல்லாப் பத்திரிகைகளிலும், இச்செய்தி, கொட்டை எழுத்துக்களில், முக்கியமான இடங்களில் கட்டம் கட்டி, படிப்பவர்களது கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் வெளியிடப் பட்டிருந்ததைக் கண்டேன். வெளி நாடுகளில் உள்ள அகில உலகப் பத்திரிகைகளிலும் இச்செய்தி வந்துள்ளது!

தமிழ் மக்களது எண்ணம் உரிமைக் குரல்—மேயர் அரசு, ஒரு அரைக் கடிதாசி மூலம், எழுதி. வானொலியில் பேச மறுத்ததால் அறிவிக்கப்பட்டுள்ளது-உணர்த்தப்பட்டு விட்டிருக்கின்றது என்பது கண்டு,நாம் உள்ளபடியே பெரிதும் பெருமையும் பெருமிதமும் அடைகிறோம்!

ஒரு பத்து போராட்டங்கள்—பல மறியல்கள் நடத்தி பல உயிர்களைக் காவு கொடுத்துப் பெறும்அளவுக்குப்பிரச்சாரம்—விளைவு-மேயர் அரசுவின் கால் கடுதாசி' பெற்றுத் தந்துள்ளதே! தமிழரின் தன்மானக் குரல் அகில உலகிற்கும் எட்டி விட்டிருக்கின்றதே!

மேயர் அரசு, வானொலியில் பேச மறுத்தது முறை கெட்ட மறுப்பு அல்லவே அல்ல, நாட்டில் உள்ள நிலைமை விளக்கந்தான்—வேறல்ல என்பது தெள்ளத் தெளிய விளங்குகின்றதே!

சம்பிரதாயங்களை, மேயர், 'அரசு' மட்டுந்தானா, இப்போது முதன் முதலாக உடைத்து விட்டார்! இல்லையே! இதற்கு முன்பும் இதுபோன்ற சம்பவங்கள், வரலாற்றில் நடைபெற்றுத் தானே உள்ளன!

முன்பெல்லாம், வெள்ளைக்கார கலெக்டரைப் பார்க்க வேண்டும் என்றால் அதற்கான 'உடுப்பு' அணியும்சம்பிரதாயம்-வழக்கம் இருந்தது. கலெக்டர் வருகிறார் என்றால் சட்டையே

(8-ம் பக்கம் பார்க்க)

இன்றே கவலையை ஒழியுங்கள்!

சரியான சிகிச்சை இல்லையே என்ற விசனம் வேண்டாம்!

நரம்புத் தளர்ச்சி, பலஹீனம், வாழ்க்கையில் வெறுப்பு, ஆகியவைகளை அறவே அகற்றுங்கள்!

மணவாழ்க்கையின் பூரண இன்ப சுகங்களை அனுபவிக்க இயலாமல் பலஹீனம், சோர்வு உணர்வு ஆகியவைகளினால் பாதிக்கப்பட்டு இதற்கு விடிவு இல்லையே என்று மனம் வருந்த வேண்டாம், இன்றே உலகப் பிரசித்திபெற்ற சிறந்த அனுபவஸ்தரும், ரகசிய வியாதி நிபுணரும், கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்டு டாக்டருமான Dr. R. P. சுந்தரம் அவர்களை நேரில் கலந்தாலோசியுங்கள்!

சோகை, தேக பலஹீனம், இளமையில் வயோதிக உணர்ச்சி, நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், மூலம், பவுத்திரம், மேக வியாதிகள் சிறுநீர் தொந்திரவுகள் போன்ற கொடியதும், சிக்கல்கள் நிறைந்ததுமான வியாதிகளை கூடிய விரைவில் ஆபரேஷன், இன்செக்ஷன் இல்லாமல் குணப்படுத்தப்படும். சிகிச்சைகள் ரகசியமாய் வைத்துக் கொள்ளப்படும். கொஞ்சம்கூட வெட்கப்படாமல் உங்களது வியாதிகளை அவரிடம் நேரில் சொல்லி அவைகளினின்றும் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

பார்க்கும் நேரம்: காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை.
மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் பார்க்கப்படும்.

தேவி ஏஜன்ஸிஸ்

142, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.

(ஸ்டார் டாக்கீஸ் அருகில்)

'ஆறுதல்' கூருது, 'குதிரை கீழே தள்ளிகுழியும்பறித்தது' என்பது போல, காமராஜர், தோற்றவர்களை 'சப்பைகள்-சரியானவர்கள்,' அல்ல என்கிருர். இது விசித்திரமும் வேடிக்கையும் மட்டுமல்ல— காங்கிரசாருக்கு வேதனை தருவதாகவுமன்ருே, இருக்கின்றது!

த. நா. காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு சொல்கிருர் - சென்ற 1955 ம் ஆண்டு நடந்த நகரசபைத்தேர்தலில் காங்கிரஸ் 33 நகரசபையின் பொறுப்பைப் பெற்றது. இப்போது 37 இடங்கள்-நாலு இடம் அதிகம் என்று அறிவிக்கிருர். அதுமட்டுமா! அண்ணு துரையின் தொகுதியான காஞ்சிபுரத்தில் காங்கிரஸ்காரர்தான் நகரசபைத் தலைவர் என்றும் சொல்கிருர்!

சென்னை-மதுரை-கோவை-சேலம் ஆகியமுக்கியமான பெரிய நகரசபையில் காங்கிரஸ் இல்லை என்பதை அவர் உணர வேண்டு. முதலில்! காஞ்சியைக்காட்டி கேலி பேசும், அவர்கள் முதலமைச்சரது விருதுநகரில் வெற்றி பேரிகையா கொட்டினுர்கள்? அங்கேகாங்கிரசுக்குஐந்தேஐந்து முதிர்ந்த கட்சிக்கு 26! உடம்பெல்லாம் 'வளைவு'கள் கொண்ட ஒட்டகம், கொக்கைப் பார்த்து 'உன் கால் வளைவு, தலைவளைவு' என்று கேலி செய்வது போலத்தான் ராஜாராம் நாயுடுவின் பேச்சு இருக்கிறது!

நேருவின் 'ஒரு பெரும்' உருவத்தைக்காட்டி காங்கிரஸ் வாழ்ந்து வருகிறது! இது எத்தனை நாளைக்குக் காங்கிரசைக் காத்திடும்? நாம்முன்னேறுகிருேம்! பொறுப்பும்அதிகரித்து வருகிறது. இதை உணர்ந்து, 'ஆட்ட பாட்டமின்றி ஏணி ஏறிச் செல்வது போல், பொறுப்புடன் காரியமாற்ற வேண்டுகிறேன்!

வடவர் தாள் ஏந்தி, அடிமையாய் 'வாழ்வது, இன்றுள்ள காங்கிரசாருக்கு வழக்கமாகி விட்டது! ஆனல், அவர்களது வீட்டில் உள்ளவர்கள்—பிள்ளைகள்—பேரன் மார்கள் எல்லாம் எங்கள் பக்கந்தான்! எதிர்கால சமுதாயம்—இளைஞர் பட்டாளம், திராவிட முகாமில் உள்ளது என்பதை உணருங்கள்! திருந்துங்கள்! தப்புக் கணக்கு வேண்டாம்! அதனல் எங்களுக்குத் தான் லாபம்!

தோழர்களே! தேர்தல் காலத்தைப் போலவே ஊக்கமுடன் உணர்ச்சியுடன், எழுச்சியும் பெற்று, காரியமாற்றுங்கள். தெருக்கள் தோறும் படிப்பகங்கள் வீடுதோறும் கழக உறுப்பினர்கள் என்ற நிலைமையை ஏற்படுத்துங்கள்! வீழ்ச்சியுற்ற திராவிடத்தில் எழுச்சி காணுங்கள்! திராவிடத்தின் விடுதலைக்கு வழி கோலுங்கள்!

வணக்கம்

ஜூன் 12-ம் தேதி முதல் சென்னை—மற்றும் தென்னாடெங்கும்

EASTERNS MALAIMANI

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணிஹைரோடு. சென்னை.
அலுவலகம் 1-35 வாணியர் தெரு. சென்னை-14